69

ணையர் (வணிகவரிகள்)

16 MAR 2023

ழிலகம், சென்னை-600 005.

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – உதவி ஆணையர் (மா.வ), பாலக்கரை சரகம் – திரு. செ.வினோத் பாண்டி என்பவர் கருணையடிப்படையில் 13.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

## வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

**அரசாணை (டி) எண்.61**

**நாள்: 10.03.2023**
**சுபகிருது , மாசி–26,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054**

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. திருச்சிராப்பள்ளி கோட்ட இணை ஆணையர் (மா.வ) அவர்களின் செயல்முறை ந.க.எண்.9031/ 2021/ஆ2, நாள் 10.12.2021.
3. திருச்சி நகரம் துணை ஆணையர் (மா.வ) அவர்களின் செயல்முறைகள் ந.எ.3383/2018/அ3, நாள் 10.12.2021.
4. முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் அவர்களின் கடித எண்.ஒய்–3/2623101/2022, நாள் 25.07.2022.

*****

ஆணை:

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர் வணிகவரித் துறையில் திருச்சி வணிகவரி கோட்டம், பாலக்கரை–1 சரகம், உதவி ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் உதவி ஆணையராக பணிபுரிந்தபோது 25.04.2018 அன்று மறைந்த திரு. இரா.செல்வம் என்பவரின் மகன் திரு. செ.வினோத் பாண்டி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 29.12.2018 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை

அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு. செ.வினோத் பாண்டி என்பவர் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தகுதியானவர் எனவும், இதன் காரணமாக மனுதாரரின் கோரிக்கை நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு மேலே மூன்றில் படிக்கப்பட்ட துணை ஆணையர் அவர்களின் செயல்முறைகளின்படி திரு. செ.வினோத் பாண்டி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதாவும், இதன் தொடர்ச்சியாக, தனியர் 13.12.2021 முற்பகல் முதல் பாலக்கரை வரிவிதிப்பு சரகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்து, தனியர் பணியில் சேர்ந்த நாளான 13.12.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில் திரு. செ.வினோத் பாண்டி கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார்.

3. எனவே, முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, வணிகவரித் துறையில், திருச்சி வணிகவரி கோட்டம், பாலக்கரை–1 சரகம், உதவி ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் உதவி ஆணையராக பணிபுரிந்தபோது 25.04.2018 அன்று மறைந்த திரு. இரா.செல்வம் என்பவரின் மகன் திரு. செ.வினோத் பாண்டி என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 13.12.2021 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.435/ட்டி1/2023–1, நாள் 01.02.23023 மற்றும் மனிதவள மேலாண்மைத்

துறையின் அ.சா.எண்.4182371/ஜி1/2023, நாள் 03.03.2023 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**பா.ஜோதி நிர்மலாசாமி**
**அரசு செயலாளர்**

<u>பெறுநர்</u>:

திரு. செ.வினோத் பாண்டி, இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் (மா.வ) அலுவலகம், பாலக்கரை சரகம்,
திருச்சி கோட்டம்.

(முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.

(முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

<u>நகல்:</u>

இணை ஆணையர் (மா.வ), திருச்சி கோட்டம்.

(முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை – 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை – 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(சு.சையத் காசிம்)
அரசு துணைச் செயலாளர்